# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 01.11.2017 | 1) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் அடல் மிஷன் (AMRUT) திட்டத்தின் கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணிகளை மேற்கொள்ள இந்திய அரசு தமிழ்நாடு அரசு மான்யம் மற்றும் மாநகராட்சி பங்குத்தொகையுடன் ரூ 256.993 இலட்சம் தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் லிமிட் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். | 128) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| திட்டத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) | மத்திய அரசு பங்கு தொகை (50% ) (ரூ. லட்சத்தில்) | மாநில அரசு பங்கு தொகை (50% ) (ரூ. லட்சத்தில்) | மத்திய அரசு பங்கு தொகை (30% ) (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1) ஜார்ஜ் ரோடு (புல்தோட்டம்) கிழக்கு மண்டலம் பகுதியில் புதிய பசுமைப் பூங்கா அமைத்தல் | 116.370 | 128.497 | 51.399 | 77.097 |
| 2) தெற்கு பீச் ரோடு பகுதியில் உள்ள ரோச் பூங்கா புனரமைக்கும் பணிகள் | 86.780 | | | |
| 3) டுவிபுரம் பகுதியில் உள்ள சங்கர நாராயணன் பூங்கா புனரமைக்கும் பணிகள் | 53.843 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்தம் | **256.993** | **128.497** | **51.399** | **77.097** |
| | 2. அடல் மிஷன் (AMRUT) வழிகாட்டுதல் படியும், மாநகராட்சி ஆணையர் அவர்களால் ஒப்பந்தம் செய்யப்பட்ட அனுமதி கடிதத்தில் குறிப்பிட்டுள்ள மேற்கண்ட திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி திட்டம் செயல்படுத்த அனுமதி வேண்டப்படுகிறது.<br>3.தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றத்தால் அனுமதிக்கப்படும் மேற்படி திட்டத்தில் பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவன பங்களிப்புடன் பூங்காக்கள் பராமரிப்பு மற்றும் திட்டம் நிறைவேற்றுதலில் மாநகராட்சி நிர்வாகத்தால் எடுக்கப்படும் அவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>மேலும் இம்மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண். 78 19.09.2017ஆம் நாளில் மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள பூங்கா அமைக்கும் பணி மற்றும் புனரமைக்கும் பணிகளுக்கு ரூ 273.00 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய மாநில அரசு மான்யம் மற்றும் மாநகராட்சி பங்கு தொகையுடன் செயல்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி (TUFIDCO) நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்கண்ட டுபிட்கோ நிறுவனத்தால் கூர்ந்தாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், டுபிட்கோ சென்னை அவர்களின் 20.11.2017 நாளிட்ட கடிதம் எண். TUFIDCO/ AMRUT/824/AM(M) 2017ல் மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு திருத்தியமைத்து மூன்று பூங்கா பணிகளுக்கு ரூ 256.993 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.<br>எனவே இம்மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண். 78 19.09.2017 ஆம் நாளிட்ட தீர்மானத்தை ரத்து செய்யவும், மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள மூன்று பூங்கா பணிகளுக்கான மதிப்பீடு தொகை ரூ 256.993 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3952/2017 | | | |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண் 04 புதிய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உழவர் சந்தைக்கு கிழக்கில் மாநகராட்சியால் புதியதாக கட்டப்பட்டுள்ள (திறந்த வெளி மலம் கழித்தல் தவிர்க்கும் திட்டத்தின் கீழ்) நவீன கழிப்பிடம் பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளபடியால், மேற்படி | | | 129) அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இனத்தை குத்தகைக்கு விடவும் குத்தகை தொடர்பான விபரங்களை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யும் வகைக்கு ஆகும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ16/04012/2017 | |
| | 3)தமிழ்நாடு அரசு பணியாளர்கள் மற்றும் உள்ளாட்சி துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 01.01.2016 முதல் கருத்தியலாகவும், 1.10.2017 முதல் பணப்பயனுடனும் திருத்திய ஊதிய விகிதம் அனுமதித்து வெளியிடப்பட்ட தமிழக அரசு அரசாணை எண். 303 (Finance (pay cell) Department) நாள் 11.10.2017 304, 305, 306 நாள்13.10.2017 311 நாள் 23.10.2017 ஆகிய அரசாணைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம்<br>சி1/4797/2017 | 130) பதிவு செய்யப்பட்டது |
| | 4)இம்மாநகராட்சி பொது சுகாதாரம் மூலம் மேற்கொள்ளப்படும் துப்புரவு பணியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட ஆட்சியர் அவர்கள் அனுமதித்துள்ள ரூ. 304/– என்ற ஊதிய விகிதத்தில் 20 துப்புரவு பணியாளர்களை மூன்று மாதத்திற்கு தினக்கூலி அடிப்படையில் அமர்த்திக்கொள்ளவும் மற்றும் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ. 304/– வீதம் 6 துப்புரவு பணியாளர்களை அமர்த்திக்கொள்ளவும் மற்றும் இரண்டு கழிவு நீர் வாகனத்திற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனுமதித்த ஊதியம் ரூ 325/– வீதம் இரண்டு வாகன ஓட்டுனர்களை St. Michael Travels தூத்துக்குடி அவர்கள் மூன்று மாதத்திற்கு பணி அமர்த்திக்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>எச்4/4850/17 | 131) அலுவலகக் குறிப்ப அனுமதிக்கப்படது. |
| | 5)தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள கடைகள் தற்சமயம் காலியாக உள்ளது. கீழ்க்கண்ட கடைகளை மாநகராட்சிக்கு வருவாயை பெருக்கும் வகையில் ஏலம், மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>எச் 2/4850/17<br>ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இனம் — மாத வாடகை<br>1) 24 பாளை ரோடு — ரூ. 16698<br>2) 21 ஜெயராஜ் ரோடு — 2675<br>3) 23ஜெயராஜ் ரோடு — 2675 | 132) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 4) 24ஜெயராஜ் ரோடு 2675<br>5) 28 ஜெயராஜ் ரோடு 2675<br>6) ஜெயராஜ் ரோடு 2675<br><br>அ) வரிசை எண். 1ல் உள்ள கடை எண் 24 பாளை ரோட்டிலுள்ள கடை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் மூலம் அரசு சார்ந்த நிறுவனம் சார்பில் அம்மா மருந்தகம் நடத்த இம்மாநகராட்சி மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு அம்மா மருந்தகம் நடந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது.<br>மேற்படி நிறுவனம் மூலம் அம்மா மருந்தகம் நடத்துவதற்கு பதிலாக பசுமை பண்ணை காய்கறி சந்தை நடத்த அனுமதி கோரப்பட்டது. மேற்படி சந்தை நடத்த மாநகராட்சி நிர்வாகம் மூலம் அனுமதி மறுக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி நிறுவனம் மூலம் கடை வேண்டாம் என தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட வாடகை முன் வைப்புத் தொகையில் ஜுன் 2017 முதல் செப்டம்கர் 2017 வரை உள்ள காலங்களுக்கு வாடகைத் தொகை மற்றும் சேவை வரி பிடித்தம் செய்யப்பட்டு மீதி தொகை வழங்கப்பட்டது.<br>ஆ) வரிசை எண் 2, 3 மற்றும் 4 கடை எண்கள் 21, 23 மற்றும் 24 ஜெயராஜ் ரோடு கடைகள் டாஸ்மாக் நிறுவனம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட கடைகள்.<br>இ) வரிசை எண் 5 மற்றும் 6 கடை எண்கள் 28 மற்றும் 29 ஜெயராஜ் ரோடு கடைகள் நீண்ட நாட்களாக பூட்டிய நிலையில் உள்ள கடைகள்.<br>**ஆ. ஆ** மற்றும் **இ** ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக நாளிதழில் விளம்பரம் செய்ய ஏற்படும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ16/04753/2016 | |

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 01.12.2017